Register No. | | | | | | | | |

**TA2A**

**6544–25**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Three-year Regular Course)

First Year – Second Semester

LAW OF CONTRACTS – II

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ★ ILLUPPUR - 622102. ★

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "The liability of a surety is co-extensive with that of a principal debtor" – Explain the rights and liabilities of surety.

   "பிணையாளரின் கடப்பாடு தலைக்கடனாளியோடு ஒருங்கிணைந்ததாகும்" – பிணையாளரின் உரிமைகளையும் கடப்பாடுகளையும் விளக்குக.

2. Describe the commencement, continuation and termination of unpaid seller's right of lien and stoppage in transit.

   செலுத்தப்படாத விற்பனையாளரின் பற்றுரிமை மற்றும் சரக்கு செல்லுகையில் நிறுத்தல் தொடர்பாக உரிமைகளின் தொடக்கம், தொடர்ச்சி மற்றும் முடிவு பெறுதல் ஆகியவற்றை விவரி.

3. "Agreement in restraint of trade is void" – Analyse the exceptions under the Indian Partnership Act, 1932.

   "வணிகத்தடை ஒப்பந்தம் செல்லாது" – இதன் விதிவிலக்குகளை இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932–ன் கீழ் ஆராய்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Differentiate Particular Lien from the General Lien.

   பொது பற்றுரிமையிலிருந்து தனி பற்றுரிமையை வேறுபடுத்துக.

5. Explain the organization, objects and procedure of the consumer protection councils under the Consumer Protection Act.
நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அமையப்பெற்றுள்ள நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்களின் அமைப்பு, நோக்கம் மற்றும் செயல்முறை ஆகியவற்றை விளக்குக.

6. "Delegatus non-potest delegare" – Explain the exceptions under the Law of Agency.
அதிகார ஒப்படைவு பெற்றவர் பிறிதொருவருக்கு அதிகார ஒப்படைவு செய்யவியலாது – முகவர் சட்டத்தின் கீழ் விதிவிலக்குகளை விவரி.

## PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Partnership – at – will
விருப்பமுறைக் கூட்டாண்மை

(b) Ratification
ஏற்பிசைவு

(c) Indemnity contracts
ஈட்டுறுதி ஒப்பந்தங்கள்

(d) Finder of Lost Goods
காணாமல் போன பொருளை கண்டெடுப்பவர்

(e) Pledge by Mercantile Agent
வணிக முகவரின் அடகு

(f) Gratuitous Bailee
கைமாறற்ற ஒப்படைவு பெறுநர்

(g) Rights of Consumer
நுகர்வோரின் உரிமைகள்

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' hires a carriage of 'B'. The carriage is unsafe and B is not aware of it. A is thrown from carriage and got injured. Analyse the liability of B.

'அ' என்பவர் 'ஆ'வின் வண்டியை வாடகைக்கு எடுத்தார். அவ்வண்டி பாதுகாப்பற்ற நிலையில் இருந்தது. ஆனால் அதனைப் பற்றி 'ஆ' அறிந்திருக்கவில்லை. 'அ' வண்டியிலிருந்து தூக்கியடிக்கப்பட்டு காயமுற்றார். 'ஆ'வின் கடப்பாடு நிலையினை விவரி.

9. B issued an advertisement that a person on purchase of Premier Padmini Car can enter into the contest to win two tickets from New Delhi to London and back. 'S' purchased the car and won the draw but tickets were not delivered to him. Discuss the Locus Standi of 'S' as consumer.

'அ' என்பவர் வெளியிட்ட விளம்பரத்தில் 'பிரிமியர் பத்மினி கார்' வாங்குபவர்கள் போட்டியில் பங்குகொண்டு புதுதில்லியிலிருந்து இலண்டன் வரை சென்று மற்றும் திரும்ப வரவும் இரண்டு பயணச் சீட்டுகள் வெல்லலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. 'இ' என்பவர் காரை வாங்கி போட்டியில் வென்றார். ஆனால் பயணச்சீட்டுகள் அவருக்கு வழங்கப்படவில்லை. 'இ' என்பவர் நுகர்வோராக வழக்கிடும் அதிகாரத்தை விளக்குக.

10. The black yarn was purchased from Merchant and the same was found damaged by the white (ants). Whether it amounts to breach of condition or warranty? Explain.

வணிகரிடமிருந்து வாங்கப்பட்ட கருப்பு கம்பளி நூல் கறையானால் அரிக்கப்பட்டிருந்தது. இது நம்புறுதி மீறலா அல்லது கட்டுவரம்பு மீறலா? விளக்குக.

Register No. | | | | | | | | |

**TA2B**

**6761–25**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Three-year Regular Course)

First Year – Second Semester

PROPERTY LAW

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What is 'Notice'? Explain various kinds of notices?

   அறிவிப்பு என்றால் என்ன? பல்வேறு வகையான அறிவிப்புகளை விளக்குக.

2. Define the rule against perpetuity and bring out its exceptions.

   வரையிலா நிலைக்கு எதிரான விதியினை வரையறுத்து அதன் விதிவிலக்குகளை எடுத்தியம்புக.

3. What is easement? Explain the methods of acquisition of easement.

   வசதியுரிமை என்றால் என்ன? வசதியுரிமை பெறும் முறைகள் பற்றி விவரி.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the rules relating to Doctrine of Contribution with case laws.

   விகிதப் பொறுப்புக் கோட்பாட்டிற்கு தொடர்பான விதிகளை வழக்குகளுடன் விவரி.

5. Define Lease. Distinguish it with licence.

   குத்தகையை வரையறு. குத்தகையை உரிமத்திலிருந்து வேறுபடுத்துக.

6. What are the requirements of a prescriptive easement? Compare it with customary easement?

   நீடனுபோக வசதியுரிமையின் முக்கியக் கூறுகள் யாவை? அதனை வழக்காறு வசதியுரிமையுடன் ஒப்பிடுக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Fixtures.

பதி பொருள்கள்

(b) Fraudulent Transfer

மோசடியான மாற்றம்

(c) Actionable claims

தொடர்தகு பாத்தியங்கள்

(d) Doctrine of Collateral Advantage

கூடுதல் ஆதாயக் கோட்பாடு

(e) Onerous Gift

பொறுப்பிணைந்த கொடை

(f) Tulk vs. Moxhay

துல்க் எதிர் மாக்சே

(g) Caveat emptor

வாங்குபவனே விழித்திரு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Ashwin publishes a libel upon Bharathi. Bharathi transfers his right to sue Ashwin to Charles. Is the transfer valid?

அஸ்வின் என்பவர் பாரதி என்பவர் மேல் நிலைவடிவ அவதூறு ஒன்றை வெளியிடுகிறார். இதற்கான தீர்வழி கோரி வழக்கிடும் உரிமையை பாரதி, சார்லஸ்க்கு மாற்றியளிக்கிறார். இவ்வாறு மாற்றுவது செல்லுமா?

9. Vasu transfers orally immovable property worth Rs. 50,000 to the idol of a temple, completing the gift according to the Sastras. Decide whether the transfer is valid.

வாசு என்பவர் ரூ. 50,000/- மதிப்புடைய சொத்தை ஒரு கோயில் மூலவருக்கு சாத்திர சடங்குகள் செய்து வாய்மொழியாக கொடை மாற்றம் செய்கிறார். இவ்வுரிமை மாற்றம் செல்லுமா என்பதை முடிவு செய்க.

10. 'A' sells property to 'B' subject to the condition that 'B' should not sell the property during A's lifetime. Is the condition valid?

'அ' என்பவர் தனது சொத்தினை 'ஆ'விற்கு உரிமை மாற்றம் செய்யும் பொழுது 'ஆ' என்பவர் 'அ'வின் வாழ்நாள்வரை பிறருக்கு உரிமை மாற்றம் செய்யக் கூடாது என நிபந்தனையுடன் உரிமை மாற்றம் செய்கிறார். நிபந்தனையின் செல்லும் தன்மை என்ன?

---

Register No. | | | | | | | | |

**TA2C**

**6545–25**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Three-year Regular Course)

First Year – Second Semester

CONSTITUTIONAL LAW – I

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Examine the concept of 'State' as defined in Art. 12 of the Constitution. What is the test to determine whether an institution or corporation is an agency or instrumentality of the State?

   இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ஷரத்து 12-ன் கீழ் வரையறுக்கப்பட்ட 'அரசு' என்னும் கருத்துருவை ஆராய்க. ஒரு நிறுமம் அல்லது கூட்டுறு அமைப்பானது அரசின் கருவியா என்பதை கண்டறியும் சோதனை என்ன?

2. Explain the scope and significance of Art. 32 of the Constitution.

   அரசமைப்புச் சட்டத்தின் ஷரத்து 32-ன் நோக்கம் மற்றும் முக்கியத்துவத்தினை விளக்குக.

3. "Directive Principles of State Policy are not enforceable in the Court of law, nevertheless, they are fundamental in the governance of the Country" – Discuss.

   "அரசுக்கு நெறியுறுத்தும் கொள்கைக் கோட்பாடானது நீதிமன்றத்தின் முன்னால் செயலாக்கம் செய்யமுடியாது, இருப்பினும் நாட்டை நிர்வகிப்பதற்கு அடிப்படை கொள்கையாக விளங்குகிறது" – விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the reasonable restrictions imposed on the right to freedom of speech and expression.

   பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள நியாயமான கட்டுப்பாடுகளை விளக்கவும்.

5. Explain the provisions of Art. 31-C of the Constitution of India.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ஷரத்து 31-C -ன் வகையங்களை விளக்குக.

6. Explain the scope of "Procedure established by law" as used in Art. 21 in the light of decided cases.

ஷரத்து 21-ன் கீழ் பயன்படுத்தப்பட்டுள்ள "சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட நடைமுறை"-ன் முக்கியத்துவத்தினை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளின் வெளிச்சத்தில் விளக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்பு வரைக :

(a) Right to Equality

சமத்துவ உரிமை

(b) Art. 20

ஷரத்து. 20

(c) Preamble

முகப்புரை

(d) Social Security Charter

சமூகப் பாதுகாப்பு சாசனம்

(e) Right against exploitation

சுரண்டலுக்கு எதிரான உரிமை

(f) Doctrine of Severability

பிரிதல் கோட்பாடு

(g) Domicile

வாழ்வகம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The Department of Broadcasting and Information has issued directions to show the educational films, news and current affairs during intervals, to all cinema theatres in the State 'X'. The directions was challenged on the ground that audience were compelled to watch documentaries and it is violative of freedom of speech and expression. Decide.

தொலைதொடர்பு மற்றும் ஒளிபரப்பு துறையானது 'X' மாநிலத்திலுள்ள அனைத்து திரை அரங்குகளில் கல்வி சார்ந்த படங்கள், செய்திகள் மற்றும் நடப்பு தகவல்கள் இடைவேளையின் போது திரையிட வேண்டும் என்ற கட்டளைகளை பிறப்பித்தது. இச்செயல் அரங்கில் ஆவணப் படங்களை இடைவேளை நேரங்களில் கட்டாயமாக பார்க்கவேண்டி வற்புறுத்தியது பேச்சுரிமையை மீறுவதாக இருக்கின்றது என்று மறுதலிக்கப்பட்டது. தீர்மானிக்கவும்.

9. The State of 'X' passed a G.O. which urged all students in the State to wear uniforms in schools. This G.O. has prohibited to wear any other religious dress inside the campus. The 'Y' organization has filed a case to declare that the G.O. is unconstitutional one on the ground that it violates the right to freedom of religion. Decide.

ஓர் அரசாணையின் மூலம் 'X' மாநிலத்திலுள்ள அனைத்து பள்ளிக் கூடங்களிலும் மாணவர்கள் ஒரே மாதிரியான சீருடைகள் அணிய வேண்டும் மற்றும் மதம் சார்ந்த உடைகளை வளாகத்திற்குள் அணியக் கூடாது என்று அறிவித்தது. இதனால் 'Y' அமைப்பானது அரசமைப்பில் உறுதிசெய்யப்பட்டுள்ள மத சுதந்திரத்தை இது மீறுவதாகக் கூறி வழக்கிட்டது – தீர்மானிக்க.

10. 'X' Corporation has issued a direction to all pavement and slum dwellers that they should vacate the business place on roads within 15 days. A NGO has challenged the Corporation's order – Decide.

நடைபாதை வியாபாரிகள் மற்றும் குடிசைவாசிகள் 15 தினங்களுக்குள் சாலையிலுள்ள வியாபாரம் மற்றும் குடியிருப்பதை விட்டுச் சென்று விட வேண்டுமென 'X' மாநகராட்சி உத்தரவுகள் பிறப்பித்துள்ளது. இவ்வாணையினை எதிர்த்து தன்னார்வ தொண்டு நிறுமம் வழக்கிட்டது – தீர்மானிக்கவும்.

Register No. [ | | | | | | | ]

**TA2D**

**6546–25**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Three-year Regular Course)

First Year – Second Semester

FAMILY LAW – II

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. State the rules of inheritance of a Hindu male who died intestate under the Hindu Succession Act, 1956.

   இந்து வாரிசுரிமைச் சட்டம், 1956ன் கீழ் உயிலின்றி இறந்த ஒரு இந்து ஆணின் வாரிசுரிமை விதிகளைக் குறிப்பிடவும்.

2. Discuss the essentials of valid Wakf and functions of Wakf Board to manage the Wakf property.

   செல்லுபடியாகும் வக்ஃப்-இன் முக்கிய சிறப்பியல்பு அம்சங்கள் மற்றும் வக்ஃப் சொத்தை நிர்வகிப்பதற்கான வக்ஃப் வாரியத்தின் செயல்பாடுகளை விவாதிக்கவும்.

3. Discuss various kinds of property of Joint Family and powers of Karta to manage the property.

   கூட்டுக் குடும்பத்தின் பல்வேறு வகையான சொத்துகள் மற்றும் சொத்தை நிர்வகிப்பதற்கான கர்த்தாவின் அதிகாரங்களைப் பற்றி விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What are the rights of kindred and collaterals to inherit the property of intestate male Christian under the Indian Succession Act, 1925?

   இந்திய வாரிசுரிமைச் சட்டம் 1925ன் கீழ் உயிலின்றி இறந்த ஆண் கிறித்தவரின் சொத்தை வாரிசாகப் பெறுவதற்கு தூரத்து உறவினருக்கு மற்றும் உடன் பிறந்தவர்களுக்கும் உள்ள உரிமைகள் என்ன?

5. How Sajjadanashin is appointed in a Khangah? What is his status as compared to Mutawalli?

ஒரு கான்காவில் சஜ்ஜாதாநஷீன் எவ்வாறு நியமிக்கப்படுகிறார்? முத்தவல்லியுடன் ஒப்பிடுகையில் அவரது நிலை என்ன?

6. What are the various kinds of debts that has to be paid before partition of Hindu Joint family property?

இந்து கூட்டுக் குடும்பச் சொத்தைப் பிரிப்பதற்கு முன் செலுத்த வேண்டிய பல்வேறு வகையான கடன்கள் என்ன?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Mushaa

முஷா

(b) Non-Indian Christian

இந்தியர் அல்லாத கிறித்துவர்

(c) Hiba-bil-iwaz

பயன்பெறு கொடை

(d) Marz-ul-maut

மரணக் கொடை

(e) Wassiyyat

வசியத்

(f) Doctrine of Aul

ஏற்றவிதிக் கொள்கை

(g) Sadagah

சதகா

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. An intestate Christian female died leaving behind son of a pre-deceased daughter, daughter, son and husband. Calculate shares of entitled legal heirs.

ஒரு கிறித்துவப் பெண்மணி விருப்பாவணமின்றி முன் இறந்த மகளின் மகன், தன்னுடைய மகள், ஒரு மகன் மற்றும் கணவர் ஆகியோரை விட்டு இறந்தார். உரிமையுள்ள சட்டபூர்வ வாரிசுகளின் பங்குகளைக் கணக்கிடுக.

9. A male Hindu died intestate leaving behind an illegitimate son, an adopted son, 2 sons of a predeceased daughter and father. Calculate shares of entitled legal heirs.

ஒரு இந்து ஆண் முறையிலா திருமணத்தில் பிறந்த மகன், ஒரு தத்தெடுத்த மகன், முன் இறந்த மகளின் 2 மகன்கள் மற்றும் தனது அப்பாவை விட்டு உயிலின்றி இறந்தார். உரிமையுள்ள சட்டபூர்வ வாரிசுகளின் பங்குகளைக் கணக்கிடுக.

10. A Muslim male died intestate leaving behind his wife, daughter and mother. Calculate shares among the entitled legal heirs.

ஒரு முஸ்லீம் ஆண் தனது மனைவி, மகள் மற்றும் தாயை விட்டு விருப்பாவணமின்றி இறந்தார். உரிமையுள்ள சட்டபூர்வ வாரிசுகளின் பங்குகளைக் கணக்கிடுக.

---

Register No. | | | | | | | | |

**TA2F**

**6778–25**

(2024 – 2025 - இல் இருந்து சேர்க்கைப் பெற்ற மாணவர்களுக்கு)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(முறையான மூன்றாண்டு சட்டப்படிப்பு)

முதலாம் ஆண்டு – இரண்டாம் பருவம்

**சட்டத்தமிழ்**

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

**காலம் : $2\frac{1}{2}$ மணி நேரம்** **உச்சவரம்பு : 70 மதிப்பெண்கள்**

பிரிவு அ — (2 × 12 = 24 மதிப்பெண்கள்)

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. மாதிரி உரிமையியல் மேல்முறையீட்டு மனுவினை வரையவும்.

2. சமூகப் பண்பாட்டில் திருக்குறளின் பயன்பாட்டை விவரிக்கவும்.

3. தமிழ் மொழியின் செம்மொழித்தன்மையை எழுதவும்.

பிரிவு ஆ — (2 × 7 = 14 மதிப்பெண்கள்)

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. நீதிமன்றங்களில் தமிழ்மொழி - வரைக.

5. வீரத்திற்கு இணையான அறத்தின் உயர்வைப் பற்றி எழுதவும்.

6. வாய்மொழிச் சான்றின் முக்கியத்துவத்தை விவரிக்க.

பிரிவு இ — (5 × 4 = 20 மதிப்பெண்கள்)

7. பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(அ) அறத்தின் அழைப்பு

(ஆ) சட்டமும் திருக்குறளும்

(இ) சட்டமும் இலக்கியமும்

(ஈ) நன்னெறிகளின் விதைப்பு

(உ) திருக்குறளின் அழகியல்

(ஊ) அறம் கூறும் சபை

(எ) தமிழ் மொழியின் வரலாறு

பிரிவு ஈ — (6 × 2 = 12 மதிப்பெண்கள்)

8. பின்வருவனவற்றுள் ஆறினுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்

(அ) சாசனம்

(ஆ) பிரதிவாதி

(இ) வாதி

(ஈ) ஆணை

(உ) தடை உத்தரவு

(ஊ) இழப்பீடு

(எ) விசாரணை

(ஏ) மேல்முறையீடு

———————